அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 04/2003

எனது இல தா/111/2/12-3
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2003 ஏப்ரல் 03

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## மோட்டார் வாகன சாரதிகளின் கடமை நேரங்கள்

இத்துடன் தொடர்பான 1993.06.07 திகதிய 12/93 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இரத்துச் செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

(1) மோட்டார் வாகன சாரதிகள் ஐந்து நாட்களைக் கொண்ட வாரமொன்றில் கடமையாற்றுவதாயின் , நாளொன்றில் ஒன்பது மணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டும்.

(11) ஆறு நாட்களைக் கொண்ட வாரமொன்றில் கடமை ஆற்றுவதாயின் நாளொன்றில் ஏழரை மணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டும்.

(111) சனிக்கிழமை தினங்களிலும் கடமையில் ஈடுபடவேண்டிய சாரதிகள் அத்தினம் ஆறரை மணித்தியாலங்கள் சேவையாற்றுவதன் மூலம் ஒரு வாரத்திற்குரிய மணித்தியாலக் கணக்கான 45 மணித்தியாலங்களை பூர்த்தி செய்யலாம்.

02. இந்த ஏற்பாடுகள் சகல விதமான வாகனங்களது சாரதிகளுக்கு ஏற்புடையதாகும்.

03. பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம் : பீ.ஜீ.கருணாரத்ன
தாபனப் பணிப்பாளர் நாயகம்